**செய்தி வெளியீட்டு எண்–417** **நாள்–27.07.2009**

# பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் தலைமையில் தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வுத் துறை அலுவலர்களின் திறனாய்வுக் கூட்டம் சென்னை, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியக் கருத்தரங்குக் கூடத்தில் **27.07.2009** அன்று முற்பகல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசுச் செயலர், டாக்டர் ட்டி. பிரபாகராவ், இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் திரு.அ. சுகுமாரன் இ.ஆ.ப., தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத் தலைவர் திரு குமரி அனந்தன், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியத் தலைவர் திரு சேம. நாராயணன், தொழிலாளர் கூடுதல் ஆணையர் திரு ப்பி. கருப்பசாமி. தலைமை தொழிற்சாலைகள் ஆய்வர் திரு செ. இரகுநாதன், தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வுத் துறை அலுவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் அமைப்புசாரா நல வாரியங்களின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட வாரியாக விரிவாக திறனாய்வு மேற்கொள்ளப்பட்டது. எதிர்வரும் அறிஞர் அண்ணா அவர்களது பிறந்த நாளான செப்டம்பர் **15**ம் தேதி முதல் அனைத்து தொழிலாளர் நல வாரியங்களின் பணிகளை கணினிமயமாக்கும் நடைமுறையினை மேற்கொள்வது குறித்து தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும், கடந்த ஜுன் மாதத்தில் மட்டும் **86,564** பயனாளிகளுக்கு பல்வேறு நலத் தி.ட்டங்களின் கீழ் உதவித் தொகையாக மொத்தம் **ரூ.26.60 கோடி** வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, உதவித் தொகை கோரி தொழிலாளர்கள் அளித்த மனுக்கள் மீது விரைவில் நடவடிக்கை எடுத்து, நலத்திட்ட உதவித் தொகை தாமதமின்றி வழங்க வேண்டுமென சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அமைச்சர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

பின்னர், ஹுண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட், எம்.ஆர்.எப். லிமிடெட், பிரிக்கால் லிமிடெட், ஆர்க்கிட் கெமிக்கல்ஸ், மதறாஸ் அலுமினியம், ஆகிய தொழிற்சாலைகளில் தொழிலாளர்களால் எழுப்பப்பட்டுள்ள தாவாக்கள் குறித்தும், தமிழகத்தில் தற்போது ஒரு சில தொழிற்சசலைகளில் நிலவிவரும் வேலைநிறுத்தங்கள் மற்றும் கதவடைப்புகள் குறித்தும் அமைச்சர் அவர்களால் திறனாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பஞ்சாலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலை பழகுநர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கு

வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச ஊதியத்தினை நிர்வாகங்கள் முறையாக வழங்கிட வேண்டும் என்பது குறித்தும், மாவட்ட ரீதியாக ஆபத்து நிறைந்த மற்றும் ஆபத்தில்லா தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்களை ஈடுபடுத்துவதை முற்றிலுமாய் தடுப்பது குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தொழிலாளர் துறை அலுவலர்களுடன் திறனாய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொழிலாளர் துறை அலுவலர்கள் தங்கள் ஆட்சி எல்லைக்குட்பட்ட தொழில் நிறுவனங்களில் ஏற்படுகின்ற தொழிலாளர் பிரச்சினைகளை சட்ட வரையறைக்குள் உட்பட்டு உரிய முறையில் தீர்வு காணவும், பிரச்னைகளை உடனுக்குடன் தீர்த்து வைத்திட தீவிர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமெனவும், தமிழகத்தில் தொழில் அமைதியினைப் பேண அனைத்து அலுவலர்களும் தனி கவனம் செலுத்தி செயல்பட வேண்டுமென மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் அவர்களால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மேலும், இக்கூட்டத்தில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படாததால், தொழிலாளர்களின் உண்மை தன்மை அறிவதில், சிக்கல்கள் உள்ளதாகவும், இதனை களையும் வகையில் அனைத்து தற்காலிக மற்றும் நிரந்தர தொழிலாளர்களுக்கும் அடையாள அட்டைகள் கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும். இவ்வடையாள அட்டையில், தொழிலாளரின் நிரந்தர தற்காலிக மற்றும் முகவரியுடன் அவரது புகைப்படம் தவறாமல் இடம் பெற வேண்டுமெனவும், இவ்வடையாள அட்டையினை அனைத்து தொழில் நிறுவனங்களும் வழங்கிட உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு தலைமை தொழிற்சாலைகள் ஆய்வருக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

தொழிலாளர் ஆணையர்.

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை –9.**